**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 42/2022**

திருமதி. வள்ளியாத்தாள் (P.W –1) **25.08.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்னுடைய தாத்தாவின் தகப்பனார் பெயர் என்ன என்றால் நஞ்சப்பன். அவருடைய வாரிசுகள் யார் என்றால் கருப்பசாமி, பாட்டையப்பன், பழனிச்சாமி, கிருஷ்ணசுவாமி, சேமலையப்பன். அவர்களுடைய வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ–17 ஆவணத்தில் கருப்பசாமி மற்றும் ஐந்து நபர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த ஆவணத்தின் பின் இணைப்பு தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தில் உரிமையாளர்களாக ஆறு நபர்கள் வா.சா.ஆ–17 ல் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் நாங்கள் ஐந்து நபர்களை தான் தாவாவில் தரப்பினர்களாக காண்பித்து உள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய தாத்தாவிற்கு என்னுடைய அப்பா நாச்சிமுத்து, பாப்பண்ணன், சுப்பராயன் என்று மூன்று வாரிசுகள் என்றால் தவறு.

2. வா.சா.ஆ–1 ஆவணத்தில் பழனிச்சாமியின் வாரிசுதாரர்கள் என்று நாச்சிமுத்து, பாப்பண்ணன், சுப்பராயன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. சுப்பராயனுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை. என்னுடைய தாத்தாவின் மகன் தான் சுப்பராயன் என்றால் தவறு. வா.சா.ஆ–1 ஆவணத்திற்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–2 ஆவணத்தின் படி என்னுடைய பாட்டி யாரிடம் இருந்து

சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளார் என்றால் கருப்புசாமியிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளார். ஆனால் அந்த ஆவணத்தில் பாட்டன் வகையறாவிடமிருந்து கிரயம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. சுப்பராயன் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றது.

3. வா.சா.ஆ–3 ஆவணத்தின் படி யாருடைய பாகத்தை என்னுடைய அப்பா கிரயம் பெற்றார் என்றால் சேமலை பாகத்தை கிரயம் பெற்றுள்ளார். தவறாக சாட்சியம் அளிக்கிறேன், அந்த ஆவணத்தின் மூலம் என்னுடைய தகப்பனார் அவருடைய தாயாரின் பாகத்தை தான் கிரயமாக பெற்றுள்ளார் என்றால் தெரியாது. ஆவணத்தை பார்த்து கேட்டபோது எனக்கு படிக்கத் தெரியாது என்று சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ–2 படி என்னுடைய பாட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்தை தான் என்னுடைய தகப்பனார் வா.சா.ஆ–3 படி கிரையமாகப் பெற்றுள்ளார் என்றால் தவறு.

4. வா.சா.ஆ–2 மற்றும் 3 படி ஐந்து பாகம் என்னுடைய தகப்பனார் கிரையம் பெறவில்லை. இரண்டு ஆவணத்தின் படியும் 1/5 பாகம் மட்டும்தான் கிரயம் பெற்றுள்ளார் என்றால் தவறு. என்னுடைய தாத்தாவும், தாத்தாவின் சகோதரர்களும் சொத்துக்களை பரிவர்த்தனை செய்து கொண்டதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளோம். அம்மாதிரி ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அம்மாதிரி பரிவர்த்தனையே ஏற்படவில்லை என்றால் தவறு.

5. வா.சா.ஆ–1 படி ஆறு வாரிசுதாரர்கள் உள்ளார்கள். 6 வது வாரிசுதாரரை பற்றி தெரிந்து கொள்ள நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஐந்து நபர்கள் தான் வாரிசுதாரர்கள். என்னுடைய தகப்பனார் நாச்சிமுத்து உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் இரண்டு நபர்கள். என்னுடைய

தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு தாக்கல் செய்துள்ளேன். நாச்சிமுத்துவுக்கு மூன்று வாரிசுகள் என்றால் தவறு. நான் மட்டும்தான் ஒரே வாரிசுதாரர். 02.09.2021 ம் தேதியில் பிரதிவாதிகளிடம் தாவா சொத்தை பாகம் பிரித்துக் கொடுக்கும்படி கேட்டதாக சொல்வதை பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்களின்படி தாவா சொத்துக்களில் எனக்கு ஆறில் இரண்டு பாகம்தான் பாத்தியப்பட்டது என்றால் தவறு. ஐந்தில் மூன்று பாகம் வர வேண்டும். தவறான ஆவணங்களின் மூலம் தவறான பாகம் கோருகிறேன் என்றால் சரியல்ல தாவாவில் நான் கோரியபடி பாகம் ஏற்படுத்த வேண்டியதில்லை. தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.08.25 19:28:42 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.